பக்கங்கள் 20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 03 திங்கட்கிழமை 19.08.2024 | அதிர்வு 017

## யாழில் நெஞ்சு வலியால் இருவர் பரிதாப மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நெஞ்சு வலியால் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

யாழ். நீர்வேலி

05▶




# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைக்கு முடிவு கட்டியே தீருவேன்

## பிரசாரக் கூட்டத்தில் சஜித் உறுதி




"ஜனாதிபதி மாற்றங்களைக் கொண்டு வருவோம் எனத் தலைவர்கள் வெட்டிக் கருத்து கூறினாலும் எந்த மாற்றமும் செய்யவில்லை. ஜனாதிபதி முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதாக ஆட்சியாளர்கள் தலதா மாளிகையில் எழுதி கையொப்பமிட்டு கொடுத்தும் அந்தக் கதிரைக்குச் சென்ற பின் அதனை மறந்து விட்டிருக்கின்றார்கள். எனக்குப் பட்டம் பதவிகளில் ஆசைகள் இல்லாத காரணத்தால் நான் அதிகாரத்துக்கு வந்தவுடனே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாது செய்து நாடாளுமன்றத்தை மையமாகக் கொண்ட ஜனநாயக ஆட்சி முறையை உருவாக்குவேன்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

05▶

# இந்தியாவில் நாமலுக்கு அமோக வரவேற்பு உண்டு

## சுப்பிரமணியன் சுவாமி கூறுகின்றார்



ராஜபக்ஷவின் பாரம்பரியம் இந்தியாவைக் குடும்பமாக ஏற்றுக்கொள்வதால் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக

05▶



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

அதில் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் இருந்து சாணக்கியன் எம்.பி., சிறிநேசன், யோகேஸ்வரன், முன்னாள் மட்டக்களப்பு மேயர் சரவணபவன், துரைராஜசிங்கம் ஆகியோர் பங்குபற்றினர்.

கூட்டத்தில் கருத்து வெளியிட்ட சாணக்கியன் சில விடயங்களைத் தெரியப்படுத்தினார்.

"நேற்று (நேற்று முன்தினம்) மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சியின் கூட்டத்தை நடத்தினோம். அந்தக் கூட்டத்தில் 99 வீதம் பேர் பொது வேட்பாளர் நிறுத்தத்துக்கு எதிராகவே கருத்து வெளியிட்டனர். இங்கு மட்டக்களப்பில் இருந்து வந்த எல்லோரும் அதற்கு சாட்சிகள். பொது

05▶



# யாழில் மத வழிபாட்டுத் தலங்களை தரிசித்த தமிழ்ப் பொது வேட்பாளர்!

தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயம் உட்பட மத வழிபாட்டுத் தலங் களுக்கு நேற்று சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

நேற்றுக் காலை தந்தை செல்வா நினைவு சதுக்கத்துக்குச் சென்ற தமிழ்ப் பொது வேட்பாளர் மற்றும் குழுவினர் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அரியநேத்திரன் குழுவினர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டது டன், நல்லை ஆதீன குருமுதல்வரைச் சந்தித்தும் ஆசி பெற்றனர்.

அத்தோடு, ஏனைய மதத் தலங்களுக்கும் அரியநேத்தி ரன் குழுவினர் சென்று வழிபட்டு, மதத் தலைவர்களிடம் ஆசியும் பெற்றனர்.







# தமிழ்ப் பொது வேட்பாளர் அறிமுகப் பொதுக்கூட்டம்

**(ந.லோகதயாளன்)**

தமிழ்ப் பொது வேட்பாளர் அறிமுகப் பொதுக்கூட்டம் முல்லைத்தீவு, வற்றாப் பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.













Vijaya Jewellery's
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
AUGUST
SAT 24 12PM - 11PM
SUN 25 11AM - 9PM
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
POWERED BY
YORK U
Markham Campus
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
EXPECTED ATTENDEES
300,000 +
Riddim of Remix
Super Sons
TITLE SPONSOR
Vijaya Jewellery
POWERED BY SPONSOR
YORK U
Markham Campus
SILVER SPONSORS
LISA
PRADON
Realty Team
WOW! WING
MARKETING PARTNER
Print Fast
PROUDLY PRESENTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SUPPORTED BY
Canada
MEDIA SPONSORS
ATN
east FM 102.7
info@canadiantamilcongress.ca 416.240.0078 tamilfest.ca @TamilFest

Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேட்பாளர்

விவகாரம் குறித்து பேசாமல் – கவனியாமல் – விட்டுவிடுவதுதான் உசிதம் என்பது எல்லோரினதும் கருத்து நிலைப்பாடாக இருந்தது. முன்னாள் எம்.பி. சிறிநேசன் கூட பொது வேட்பாளரினால் தமிழர்களின் வாக்குகளில் ஐம்பது வீதத்தைப் பெற இயலாது என்றால், அவரைத் தேர்தல் களத்தில் இருந்து விலகிக் கொள்ளுங்கள் என்ற அறிவிக்குமாறு வழி காட்டுவதுதான் நல்லது என்ற சாரப்பட அங்கு கருத்துச் சொன்னார்" – என்று சாணக்கியன் அங்கு குறிப்பிட்டார்.

மத்திய குழு கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த சிறிநேசன் அதை மறுக்கவில்லை.

மட்டக்களப்பில்இருந்துபொதுவேட்பாளராகப் போட்டியிடுவதற்குச் சென்றுள்ள அரியநேத்திரனுக்கு கள நிலைவரத்தை எடுத்துரைத்து, ஆலோசனை கூறி, வழிபடுத்துவதற்கு ஐந்து பேர் குழு ஒன்றை தமிழரசு நியமிக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்டக் கூட்டத்தில் முதலில் முடிவு செய்யப்பட்ட போதிலும், அந்த ஐவர் குழுவில் பணியாற்ற எவருமே முன் வராதமையினால் அந்த ஐவர் குழு நியமன முயற்சி கைவிடப்பட்டது. இவ்வளவுக்குப் பிறகும் – பின்னரும் – அவரைத் தேடிப் போய் அட்வைஸ் கொடுப்பது வேஸ்ட் என்று அவர்கள் கருதியமை இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று குறிப்பிட்டார் சாணக்கியன்.

அவர் இன்னொரு விடயத்தையும் கூறினார். கட்சிக்குள் – மத்திய குழுவில் – இரண்டு பேர் தங்களுக்குள் கருத்தியல் ரீதியில் மோதிக்கொண்டால், அதில் ஒருவர் கிழக்கைச் சேர்ந்தவராகவும் மற்றவர் வடக்கைச் சேர்ந்தவராகவும் இருந்துவிட்டால் அதை – அந்த சர்ச்சையை – பிரதேச வாதச் சண்டையாகக் காட்டும் பொறுப்பற்ற போக்கு தொடர்கின்றது. இது தவறானது என்று விசனத்துடன் சுட்டிக்காட்டினார் சாணக்கியன்.

நேற்றைய மத்திய குழு கூட்டத்திலும் வடக்கு கிழக்கு சாரப்பட்ட இருவரின் மோதல் தொடர்ந்தது.

'போதை வஸ்துப் பாவனையாளர்', 'அடியாள்', 'பொம்பளைப் பொறுக்கி' என்ற வசைபாடல்கள் எல்லாம் தாராளமாகத் தொடர்ந்தன.

பாவம் தமிழரசு!

# இந்தியாவில் நாமலு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாமல் இணைந்தது வரவேற்கத்தக்கது என்று இந்தியாவின் முன்னாள் அமைச்சரவை அமைச்சரும் பா.ஜ.க. உறுப்பினருமான

சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி நாமல் தனது பரப்புரையை ஆரம்பிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வடக்கு மாகாண அரசியல்துறை உறுப்பினர் கீதாநாத் காசிலிங்கம் விடுத்த அறிக்கைக்குப் பதிலளித்த சுப்பிரமணியன் சுவாமி, மற்ற அண்டை நாடுகளின் தலைவர்களைப் போல் அல்லாமல் இந்தியாவில் நாமலுக்கு அமோக வரவேற்பு இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

மேலும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை மஹிந்த ராஜபக்ஷ முடிவுக்குக் கொண்டு வந்ததன் காரணமாக ராஜபக்ஷ குடும்பத்தினர் அதிகம் வரவேற்கப்பட்டனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# யாழில் நெஞ்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய தவராசா ரகுமாதேவா என்ற நபர் வேலைக்குச் சென்ற நிலையில், நெஞ்சு வலி ஏற்பட்டதால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நேற்றுக் காலை கூலி வேலைக்குச் சென்றிருந்த நிலையில் நெஞ்சு வலி ஏற்பட்டதன் காரணமாக முற்பகல் 11 மணியளவில் வீடு திரும்பியுள்ளார்.

இதையடுத்து அவர் மூச்சு விடச் சிரமப்பட்ட நிலையில் நண்பகல் 12 மணியளவில் கோப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காகச் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபர் நெஞ்சுவலி ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த சேகுலாப்தின் முஹமட் காபில் (வயது 40) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நேற்றுமுன்தினம் காலை நாகர்கோவில் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்றுள்ளார். கடற்கரையிலிருந்து 24 கிலோமீற்றர் தூரம் கடலினுள் சென்று நூறு அடி ஆழத்தில், ஒட்சிசன் சிலிண்டர் பயன்படுத்திக் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தபோது அவருக்குத் திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டதையடுத்து அவர் முற்பகல் 11 மணியளவில் கரையை வந்தடைந்துள்ளார்.

பின்னர் பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் மாலை 5 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# நிறைவேற்று அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் நான்காவது வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ருவன்வெல்ல தெஹியோவிட்ட பிரதேச சபை மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏராளமான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் அதிகாரத்தை எடுக்கவில்லை என்று பல்வேறு தரப்பினர் கூறிக்கொண்டிருந்தாலும் ராஜபக்ஷக்கள் உள்ள இடத்தில் நான் இருப்பதில்லை. இந்த நாட்டை அடி பாதாளத்துக்குள் தள்ளிய ராஜபக்ஷக்களுக்குப் பிரதான பாதுகாவலராக இந்த நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருந்து வருகின்றார். ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கின்ற ஐ.ஜி.பியாகவும், ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கின்ற பொலிஸ்மா அதிபராகவும் அவர் இருந்து வருகின்றார்.

நான் பிரச்சினைகளிலிருந்து தப்பிச் செல்வதில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கான சவால்களில் முன் நிற்கின்றேன். வேறு வேட்பாளர்களைக் களமிறக்கிக் கட்சியின் தலைமைத்துவத்தைப் பாதுகாத்துக் கொள்கின்ற நிலைப்பாட்டில் நான் இருந்தது இல்லை.

இன்னும் சில தினங்களில் வருகின்ற ஜனாதிபதித் தேர்தலுக்காகத் திருடர்களுடன் டீல் இல்லாத அரசியல் ஒப்பந்தங்களுக்காக மக்களைக் காட்டிக் கொடுக்காத மக்களின் வாக்குகளைப் பெற்று அவர்களை மறந்து விடாத நன்றிக் கடன் அறிந்த ஒரு யுகத்தை உருவாக்கி, அந்த யுகத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களைப் போஷிக்கும் சுவர்ண மயமான காலமாக மாற்றி திருடர்களைப் பிடிக்கின்ற யுகமாக மாற்றுவோம். திருடர்கள், மோசடிக்காரர்கள், ஊழல்வாதிகள் ஆகியோருடன் எனக்கு டீல் இல்லை.

திருடர்கள் மற்றும் ஊழல்வாதிகளுடன் டீல் இல்லாத காரணத்தால் பதிலீடாக ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்கவில்லை. நான் இந்த ஜனாதிபதி கதிரைக்கு மக்களின் வாக்குகளாலே தெரிவு செய்யப்பட வேண்டும். இந்த நாட்டின் உரிமையாளராக அன்றி தற்காலிக பொறுப்பாளராகப் பொதுமக்களின் சேவகனாக இருந்து திருடர்களால் திருடப்பட்ட நாட்டின் சொத்துக்களைமீண்டும் நாட்டுக்குப் பெற்றுக்கொடுப்பேன்.

எல்லையற்ற விதத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்தி பழிவாங்குதல், விரோதம், குரோதம், பேராசை என்பன வற்றைப் பயன்படுத்தி மக்களின் வாக்குப் பலத்தை இல்லாமல் ஆக்கி தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்கின்ற சுயநலத்தன்மை அதிகரித்துக் காணப்படுகின்ற ஒரு யுகத்தில் வாழ்கின்றோம். இந்த மக்கள் சமூகத்துக்குள் அசாதாரண தன்மையை ஏற்பட்டிருக்கின்றது. வருமானம் பிரிந்து சென்று வறுமை அதிகரித்துக் காணப்படுகின்றது. நாட்டில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் ஏழைகளாக மாறியிருக்கின்றார்கள். இவர்களுக்கு எந்தத் தீர்வும் இல்லை.

கைக்குழந்தை முதல் சிறுவர்கள் வரையும், தாய்மார்கள், இளைஞர்கள், மாணவர்கள், வயது முதிர்ந்தவர்கள் என ஒட்டுமொத்த சமூகத்தினரும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றனர்.

உண்மையைப் பேசுகின்ற வெளிப்படைத் தன்மையுள்ள ஊழல், மோசடியற்ற ஒரு யுகத்தை உருவாக்கி ஒரு பொருளாதார மறுமலர்ச்சியை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்படுத்தும். நாட்டின் பொருளாதாரம் சிறைப்படுத்தப்பட்டுள்ளது. அது நுண் பொருளாதாரத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று குறிப்பிட்டாலும், வரிசைகள் இல்லை என்றாலும், எல்லாம் ஒருநிலைப்படுத்தப்பட்டு இருப்பதாகக் கூறினாலும் நிவாரணங்களை இல்லாது செய்து, அசௌகரியங்களை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத்

06▶









## நிறைவேற்று அதிகார...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தரத்தை மட்டுப்படுத்தி வரிசை யுகத்தை நிறைவு செய் திருக்கின்றனர்.

ஜனாதிபதி நினைத்தபடி நாட்டில் சுற்றுப்பயணம் செல்கின் றார். அடியாட்களுக்கும் நண்பர்களுக்கும் ஒப்பந்தங்களை வழங்கி இலாபங்கள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. மக்கள் ஏழ்மைக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். மூன்று வேளையும் உணவு உண்ண முடியாத மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் ஏழ்மையில் இருந்து மக்களை மீட்டெடுக்கின்ற யுகத்தை எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி உருவாக்கு வேன்.

தேயிலை பயிரிடப்படாத அரசின் காணிகள் மற்றும் தேயிலை பயிரிடப்படாத தனியாரின் காணிகளைப் பெருந்தோட்டங்களில் சேவை புரிகின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கும், தொழில் இல்லாத இளைஞர்களுக்கும் வழங்கி சிறு தேயிலை உற்பத்தி யாளர்களாக மாற்றி அவர்களின் பங்களிப்பை தேயிலை உற்பத்திக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன். நாட் டின் தேயிலை உற்பத்திக்கு அதிகளவில் பங்களிப்புச் செய் கின்ற உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுப்பேன்." – என்றார்.









# நமது கருத்து

## சஜித்தின் வாக்குறுதி

வாக்குறுதிகளை அள்ளி வீசுவது சுலபம். நிறைவேற்ற முயலும் போது தான் அதன் சிக்கல்கள் புரியும்.

இப்படித்தான் தேர்தல் வாக்குறுதிகளும். தேர்தல் விஞ்ஞாபனங்களைப் பார்த்தால் வாக்குறுதிகள் பக்கம் பக்கமாக விஞ்சிக் கிடக்கும். ஆனால் வெற்றி பெறுபவர்கள் பெரும்பாலும் தேர்தலுடன் விஞ்ஞாபனத்தையும் வாக்குறுதிகளையும் மறந்து விடுவர்.

இது ஒன்றும் நமது நாட்டு மக்களுக்குப் புதிய விடயமேயல்ல. காலம் காலமாகத் தொடரும் ஏமாற்றுக் கதைதான்.

அந்த வரிசையில், பலரும் ஏற்கனவே ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறி விழுந்த மாதிரி, இப்போது பலரும் அளித்து நிறைவேற்றாமல் போன வாக்குறுதி ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தானும் தன் வாக்குறுதியாக அறிவித்திருக்கின்றார்.

அதனை இந்தத் தேர்தலில் வென்று அவர் நிறைவேற்றுவாரா என்பதுதான் இப்போது கேள்வி.

ஆம், இந்தத் தேர்தலில் தாம் வென்று ஜனாதிபதியானால் அதிகாரத்துக்கு வந்த உடனேயே நிறைவேற்றுதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாது செய்து, நாடாளுமன்றத்தை மையமாகக் கொண்ட ஜனநாயக ஆட்சி முறையை உருவாக்குவேன் என அவர் அறிவித்திருக்கிறார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான கால அவகாசத்தை அவர் வரையறுத்துக் கூறவில்லை. மாறாக, தாம் அதிகாரத்துக்கு வந்த உடனேயே அதனைச் செய்வார் என்று அவர் கூறியிருக்கிறார்.

முதலில் இந்த முறைமை மாற்றம் என்பது நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை வைத்திருக்கும் தனிநபரால் மட்டும் நிறைவேற்றி முடித்து விடக் கூடிய விடயமே அல்ல.

அதற்கு பிற தரப்புக்களினதும் முழு ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசியம் என்பதை அவர் மறந்து விட்டார் போலும்.

முதலில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு - அல்லது அந்த மாற்றத்தைக் கொண்ட புதிய அரசமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு - குறைந்தபட்சம் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெற வேண்டி இருக்கும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் முழு ஆதரவும் கூடத் தேவை.

இவை இரண்டும் இல்லாமல் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதியால் மாற்ற முடியாது என்பதுதான் நிஜம்.

சஜித் பிரேமதாஸ கொடுத்த இந்த வாக்குறுதி புதியதல்ல. ஏற்கனவே இந்தப் பதவிக்கு இதே வாக்குறுதிகளை வழங்கி அதன் மூலம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிட்டு, அதை செய்யாமல் போன - செய்ய முடியாமல் போன - தலைவர்கள் பலர் உள்ளனர்.

ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க என்று நான்கு பேர் இதே வாக்குறுதிகளை வழங்கியவர்கள், பின்னர் ஜனாதிபதியாகி விட்டு, அதனைச் செய்யாமல், செய்ய முடியாமல், பதவியில் இருந்து விலகிச் சென்றமையை - செல்கின்றமையை - நாம் கண்டு இருக்கின்றோம். காண்கின்றோம்.

அவர்கள் யாருமே தாம் பதவிக்கு வந்த பின்னர் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதற்கு காத்திரமான நடவடிக்கை எதையுமே எடுக்கவில்லை என்பதுதான் யதார்த்தமாகும்.

இப்போது சஜித் பிரேமதாஸ முன்வைக்கும் இந்த வாக்குறுதியும் அப்படித்தான் காற்றில் கரைந்து போகுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# கருணாநிதி நினைவு நாணயத்தை வெளியிட்டு வைத்தார் ராஜ்நாத் சிங்

**கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயத்தை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார்.**

சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று மாலை இடம்பெற்ற விழாவில் கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயத்தை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார். அதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் பெற்றுக் கொண்டார். 100 ரூபா முகமதிப்பு கொண்ட அந்த நாணயத்தில் 'தமிழ் வெல்லும்' என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.

இந்த விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின், கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவில் பெருந் தன்மையோடு கலந்து கொண்டுள்ள மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய இணை அமைச்சர் எல். முருகன், அதிகாரிகள், விழாவில் பங்கேற்றுள்ள அனைவரையும் வரவேற்பதாகக் கூறினார்.

நாணய வெளியீட்டுக்காக ஒத்துழைத்தமைக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

இந்த விழாவுக்கு தி.மு.க. பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் முன்னிலை வகித்து வரவேற்புரையாற்றினார்.

இந்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் சிறப்புரையாற்றுகையில்,

"அனைத்துக் கட்சியினருடனும் நட்பு பாராட்டும் ராஜ்நாத் சிங் கருணாநிதி நினைவு நாணயத்தை வெளியிட பொருத்தமானவர். சுதந்திர தினத்தன்று மாநில முதல்வர்கள் தேசியக் கொடியை ஏற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் கருணாநிதி. கருணாநிதி நூற்றாண்டு விழாவை இந்தியாவே கொண்டாடுகிறது.

மாநில உரிமைகளுக்காகப் போராடிய கருணாநிதி நெருக்கடி நேரங்களில் நாட்டுக்கு கைகொடுத்தார். தமிழகத்தில் நடப்பது ஒரு கட்சி சார்ந்த அரசல்ல இங்கே ஓர் இனத்தில் அரசு நடக்கிறது." - என்றார்.

நாணயத்தை வெளியிட்ட மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் உரையாற்றுகையில்,

"மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி துணிச்சல் மிக்க தலைவர். தலைசிறந்த நிர்வாகி. 1960 முதல் தற்போது வரை ஆதிக்கம் செலுத்தும் கட்சியாக தி.மு.கவை வளர்த்தவர். விளிம்புநிலை மக்களுக்கு தரமான வாழ்க்கை நிலையை கொண்டுவந்தவர். பல்வேறு தேசிய கட்சிகளுடன் நல்லுறவைப் பேணியவர். தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் அரசியல் வரைபடத்தை உருவாக்குவதில் கருணாநிதிக்கு முக்கிய பங்கு இருக்கிறது. கூட்டாட்சி தத்துவத்துக்கு பாடுபட்ட கருணாநிதி நாட்டின் நலனுக்காகவும் குரல் கொடுத்தவர்.

மகளிர் உரிமை மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் உரிமைக்காக தீவிரமாக உழைத்தவர். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை அவரது அரசாங்கம் இயற்றியது. மகளிர் சுய உதவி குழுக்களை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

விவசாயத் தொழிலாளர்கள், திருநங்கைகள் உள்ளிட்ட அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்களை உருவாக்கினார். நாட்டின் முன்னேற்றத்தில் அவரது கவனம் இருந்தது. இந்திய ஜனநாயகத்தின் பலம் பன்முகத்தன்மை என்பதை அறிந்தவர். மாநில உரிமைகள் சார்ந்து குரல் கொடுத்தவர். கூட்டாட்சி தத்துவத்தை அறிந்தவர்.

அவர் முதல்வராக இருந்த காலத்தில் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று கல்வி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் கவனம் செலுத்தியது. அவரது பார்வை தமிழகத்தில் மட்டும் நின்றுவிடவில்லை என்பதை கவனிக்க வேண்டும். தேசிய வளர்ச்சிக்கு மாநில வளர்ச்சி இன்றியமையாதது என்பதை அறிந்தவர். தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான அவரது முயற்சிகள், அதற்காக மேற்கொண்ட பணிகள் முக்கியமானது." - என்றார்.

# கேதார்நாத் மலைப்பாதை 15 நாள்களுக்கு பின் திறப்பு




நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட கேதார்நாத் மலையேற்றப் பாதை சீரமைக்கப்பட்டதை தொடர்ந்து 15 நாள்களுக்குப் பிறகு பக்தர்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.

உத்தராகண்டில் கேதார்நாத், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய 4 இடங்களில் உள்ள புகழ்பெற்ற கோயில்களுக்கு செல்லும் சார்தாம் யாத்திரை கடந்த மே மாதம் தொடங்கியது.

இந்த நிலையில் கடந்த ஜுலை 31 ஆம் திகதி பெய்த கன மழை காரணமாக கேதார்நாத் செல்லும் மலையேற்றப் பாதையில் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

19 கிலோ மீற்றர் தூரமுள்ள இப்பாதையில் 29 இடங்களில் நிலச்சரிவு இடிபாடுகள் அகற்றப்பட்டு, வெள்ளிக் கிழமை இப்பாதை மீண்டும் திறக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





# கமலா ஹாரிசை உருவக்கேலி செய்தார் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்க தேர்தல் பிரச்சார கூட்டங்கள் சூடுப்பிடித்துள்ள நிலையில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கமலா ஹாரிசை விட தான் அழகாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் பென்சில்வேனியாவில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க தேர்தல் நவம்பர் மாதமளவில் நடைபெறவுள்ள நிலையில் குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் டொனால்ட் ட்ரம்ப் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், இருவரும் தேர்தல் பிரச்சாரகூட்டங்களில் ஈடுப்பட்டுள்ளனர். அதிலும், டொனால்ட் ட்ரம்ப் தனது தேர்தல் பிரச்சாரகூட்டங்களில் கமலா ஹாரிசின் மீது பலவகையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார்.

அவர் தனது உரையில், “ஜோ பைடனை விட கமலா ஹாரிசை தோற்கடிப்பது மிகவும் எளிதானது என நம்புகி றேன். பல முக்கியமான கொள்கைகளை வகுப்பதில் கமலா ஹாரிஸ் தீவிர இடதுசாரியைப் போல் நடந்துகொள்கிறார்.

அவர் சிரிப்பதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? அவர் அழகானவர், ஆனால் நான் அவரை விட அழகாக இருக்கி றேன்” என தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உட்பட, கட்சியின் பல்வேறு மூத்த தலைவர்கள் கமலா ஹாரிஸிற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# தொடரும் போர்நிறுத்தப் பேச்சு வார்த்தைகள்: இஸ்ரேல் செல்லவுள்ளார் அமெரிக்க பிரதிநிதி

இஸ்ரேல் காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளுக்காக அமெரிக்க வெளியுறவு செயலாளர் ஆண்டனி பிளிங்கன் இஸ்ரேலுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் நாடுகளின் மத்தியஸ்தர் கள் இணைந்து கடந்த வியாழன் மற்றும் வெள்ளியன்று டோஹாவில் இஸ்ரேலிய தூதுக்குழுவை சந்தித்து போர் நிறுத்தத்தை உறுதி செய்வதற்கான புதிய புதியக்கட்ட பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

அந்தவகையில், சமீபத்திய போர் நிறுத்தப் பேச்சுவார்த் தைகளின் பிறகு, இந்த ஒப்பந்தத்தை நிறைவு செய்யும் நோக் கில், தனது வெளியுறவுத் துறை செயலாளரை இஸ்ரேலுக்கு அனுப்பவுள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.

அதன்படி, பிளின்கன் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பிற மூத்த அதிகாரிகளை சந்திக்கவுள்ள தாகவும் அத்துடன் போர்நிறுத்த பேச்சுவார்த்தைகள் மற்றும் மத்திய கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்து கலந்துரையாடவுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

குறிப்பாக, கடந்த மே மாதம் ஜோ பைடன் முன்மொழிந்த போர் நிறுத்தத்த உடன்படிக்கைக்கு தாம் விரும்புவதாகவும் புதிய நிபந்தனைகளுடனான ஒப்பந்தத்ததை தாம் நிராக ரிப்பதாகவும் ஹமாஸ் தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், போர்நிறுத்தப் பேச்சு வார்த்தைகள் குறித்து தாம் நம்பிக்கையுடன் இருப்பதாகவும், அதற்காக தமது குழு செயற்படுவதாகவும் ஜோ பைடன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும், காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா நடுநிலையாக செயல்படவில்லை என போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டட ஈரானின் தற்காலிக வெளியுறவு அமைச்சர் அலி பகேரி கனி தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சந்நிதியான் ரதோற்சவம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

தேர்த் திருவிழாவில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய தினம் திங்கட்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.














# தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்தி அபிவிருத்தித் திட்டங்களைச் செய்வோம்!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

"செப்டெம்பர் 21 ஆம் திகதிக்கு பின்னர் தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்போம். சுயநல தேவைகளுக்காக எம்மை விட்டு விலகிச் சென்றவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்."

– இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

திஸ்ஸமஹறாம மகா விகாரையில் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம். சர்வமத வழிபாடுகளுடன் எமது முதலாவது தேர்தல் பிரச்சாரத்தை புதன்கிழமை அநுராதபுரம் நகரில் நடத்துவோம். எமது வெற்றியில் நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் பங்காளிகளாவர்.

செப்டெம்பர் 21 ஆம் திகதிக்கு பின்னர் தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்போம். தேசிய உற்பத்திகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுப்போம். தனி நபரின் முன்னேற்றத்துடன் மாத்திரமே பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தங்களின் சுயநல தேவைகளுக்காக எம்மை விட்டுச் சென்றவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். நபர்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் செய்யவில்லை. கொள்கையை முன்னிலைப்படுத்தி அரசியலில் ஈடுபட்டுள்ளோம்.

ஜனாதிபதி தேர்தலில் யார் யாருக்கு சவால் என்பது குறித்து கவனம் செலுத்துவதை விட நாடு எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். கொள்கை அடிப்படையில் எம்முடன் எவரும் கைகோர்க்கலாம்."– என்றார்.















# நாட்டின் பல பிரதேசங்களில் கனமழை; ஆறு மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

நாட்டின் 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, புளத்சிங்கள மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான, எஹெலியகொட, எலபாத்த ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை, மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரி வித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள மழையுடனான வானிலையினால், 360 குடும்பங்களைச் சேர்ந்த 1,404 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்திலேயே அதிகளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய களுத்துறை மாவட்டத்தில் 764 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 636 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் மழையுடனான வானிலையினால் நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாட்டின் பல பகுதிகளில் 75 மில்லி மீற்றர் அளவிலான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன்படி மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அத்துடன், மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 75 மில்லி மீற்றர் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன், மின்னல் தாக்கங்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தேர்தல் தொடர்பில் 519 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 519 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியிலேய இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 503 முறைப்பாடுகளும், வன்முறை தொடர்பில் ஒரு முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் இதுவரையான காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 16 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என பதில் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.



# டெங்கு நோய் அதிகரிக்கக் கூடிய நிலைமை உள்ளதாக எச்சரிக்கை



நிலவும் மழையுடனான காலநிலைக் காரணமாக டெங்கு நோய் அதிகரிக்கக் கூடிய நிலைமை உள்ளதாகத் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 34 ஆயிரத்து 906 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதில் மேல் மாகாணத்திலேயே அதிகளவானோர் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

அதன்படி, மேல் மாகாணத்தில் இதுவரையில் 14 ஆயிரத்து 248 பேர் டெங்கு நோயுடன் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே, நிலவும் மழையுடனான காலநிலையைக் கருத்திற் கொண்டு டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்களை அனுமதிக்காமல் சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.



# உலக உணவுத் திட்டத்திடம் இருந்து விவசாயிகளுக்கு இலவசமாக உரம்!

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் 55 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் இலங்கைக்குக் கிடைக்கப்பெற உள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்துடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த உரம் கிடைத்துள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும் இரண்டுபயிர்ச்செய்கை காலங்களுக்குத் தேவையான அடிகட்டு உரம், இந்தப் பருவத்திலிருந்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.



# எய்ட்ஸ் நோயாளர்கள் கண்டறியப்படும் எண்ணிக்கை 300 வீதத்தால் அதிகரிப்பு

நாட்டில் எய்ட்ஸ் நோயாளர்கள் கண்டறியப்படும் விகிதம் 300 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்கள் சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தநிலைமையைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதன் தலைவர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டில் எய்ட்ஸ் நோயாளர்கள் கண்டறியப்படும் விகிதம் நாட்டின் சனத்தொகையில் ஒரு மில்லியனுக்கு 0.03 வீதமாகக் காணப்பட்டது.

எனினும், தற்போது இந்த விகிதம் 0.1 வரை அதிகரித்துள்ளது.

இதன்படி எய்ட்ஸ் நோயாளர்கள் கண்டறியப்படும் விகிதம் 300 வீதமாகப் பதிவாகியுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்கள் சங்க கூட்டமைப்பின் தலைவர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.



# களு கங்கையின் நீர் மட்டம் உயர்வு; வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம்

இரத்தினபுரி பிரதேசத்தில் களு கங்கையின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் குடாகே, மில்லகந்த பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

அத்துடன், ஜின்கங்கையின் நீர் மட்டம் பத்தேகம பகுதியில் அதிகரித்து வருகின்றது.

மேலும், அத்தனகலு ஓயாவின் நீர் மட்டம் தூனமலே பகுதியில் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.




# அரியநேந்திரன் பதிலளிக்க 2 வார அவகாசம்: கட்சிக் கூட்டங்களில் பங்கேற்பதற்கும் தடை!

## தமிழரசு நிலைப்பாட்டை சுமந்திரன் எம்.பி. வெளியிட்டார்

(கே.வசந்தன்)

பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள அரியநேந்திரனுக்க்ஜ் விளக்கம் கோரி இரண்டு வார கால அவகாசம் கொடுத்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதுவரை கட்சிக் கூட்டங்களிலும் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதான வேட்பாளர்களுடன் போச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எமது அடிப்படை நிலைப்பாடு வடக்கு – கிழக்கு இணைந்த சமஸ்டி அடிப்படையிலான தீர்வு ஆகும். மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாகவும், பேசிய விடயங்களையும் கூட்டத்தில் தெரியப்படுத்தினோம். சில முன்னேற்றகரமான கருத்துக்களை அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவர்களது தேர்தல் அறிக்கை வெளிவந்த பின்னரே எமது இறுதி முடிவு எடுக்கப்படும்.

நாமல் ராஜபக்ஷ என்னுடைய வீட்டிற்கு வந்து சந்தித்து இருந்தார். அவர்களிடம் உள்ள விடயங்களை தெரியப்படுத்தினார். அது, அதி தீவிர சிங்கள வாக்குளை பெற்றுக் கொள்வதை நோக்கமாக கொண்டிருந்தது. அதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் கலந்துரையாடியிருந்தோம். தற்போது தெற்கில் சிங்கள, பௌத்த பேரினவாதம் தலைத் தூக்காமல் உள்ளது. அது தொடர்பில் கலந்துரையாடினோம்.

எமது மக்களை வழிகாட்டுவதற்காக நாங்கள் ஆவணம் ஒன்றை தயாரிக்கவுள்ளோம். அதற்கான சிறு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தெளிவாக மக்களை வழிப்படுத்துவற்காக தேர்தலுக்கு முன்பாக நாங்கள் ஆவணம் ஒன்றைத் தெளிவாக வழங்கவுள்ளோம்.


தமிழ் பொது வேட்பாளராக வர்ணிக்கப்பட்டுள்ள அரியநேந்திரன் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. சென்ற கூட்ட தீர்மானத்தின் படி விளக்கம் கோரி இரண்டு வார கால அவகாசம் கொடுத்து அவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பதில் கிடைத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்போம். அதுவரைக்கும் எமது கட்சியின எந்தக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ள மாட்டார். அந்தப் பின்னனியில் எதிர்வரும் நாள்களில் இடம்பெறும் பிரசாரக் கூட்டங்கள் தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ளன. கட்சி இது சம்பந்தமாக எமது ஆதரவாளர்களுக்கு கொடுக்கும் அறிவுரை என்னவென்றால் ஒருவருரிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளோம். இதனால் மேடைகளில் ஏறி ஆதரித்து பேசும் போது அவதானமாக இருக்குமாறு கட்சி உறுப்பினர்களை கேட்டுக் கொள்கின்றோம். எமது கட்சி இது வரை யாருக்கு ஆதரவு வழங்குவது என எந்த தீர்மனத்தையும் எடுக்கவில்லை. – எனக் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதித் தேர்தலின் பிரசாரங்களில் தேசியக் கொடியைப் பயன்படுத்தத் தடை

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களுக்கு தேசியக் கொடியைப் பயன்படுத்த வேண்டாம் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு பயன்படுத்தினால் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் இது தொடருமானால் இன்னும் சில நாள்களில் தேசிய கீதம் கட்சிகளின் பாடலாக மாறும் என்றும் தேர்தல்கள் ஆணை யாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஊடகவியலாளர்களுக் குத் தெளிவூட்டும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.




### முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளில்

# 478 வெளிப்படுத்தல் உறுதிகளை ஒரே நொத்தாரிஸ் எழுதியுள்ளார்!

**(ந.லோகதயாளன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளில் 568 வெளிப்படுத்தல் காணிஉறுதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் 478 உறுதிகளை ஒரே நொத்தாரிஸ் பதிவு செய்துள்ளமை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் எழுதப்படும் உறுதிகளில் வெளிப்படுத்தல் உறுதி வகையும் ஒன்றாகும். ஏற்கனவே நீண்ட காலத்தின் முன்பு உறுதி எழுதியபோதும் அனைத்து ஆவணங்களையும் தவறவிட்டவர்கள், உறுதி இன்றி நீண்ட காலமாக காணிகளை தங்கு தடையற்ற ஆட்சி செய்பவர்கள் இந்த வகையான உறுதிகளை எழுதும் சந்தர்ப்பம் உள்ள போதும் இதில் பல சர்ச்சைகளும் அல்லது முரண்பட்ட தகவல்களும் வெளிவருகின்றன. குறிப்பாக அரச காணி ஒன்றிற்கு எந்த வகையிலும் வெளிப்படுத்தல் உறுதி எழுதவே முடியாது என்ற விதிமுறைக்கு முரணாகவும் சில உறுதிகள் எழுதப்படுவதான குற்றச்சாட்டுகளும் முன் வைக்கப்படுகின்றன.

இதேநேரம் காணி உரிமையாளர் அற்ற காணிகள் பல இந்த வகையான உறுதிகள் மூலம் மோசடியாக உரிமை கோரப்படுவதான குற்றச்சாட்டும் நீண்ட காலமாக எழுப்பப்படுவதனால் இந்த வகை உறுதிகளின் எண்ணிக்கை தொடர்பில் தேடுதலில் ஈடுபட்டபோதே இந்த எண்ணிக்கை கண்டறியப்பட்டது.

இவ்வாறு தேடப்பட்டதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளாக எழுதிய வெளிப்படுத்தல் உறுதிகளின் எண்ணிக்கை தொடர்பில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யப்பட்டது. முல்லைத்தீவில் வெளிப்படுத்தல் வகை உறுதிகள் 568 பதிவு செய்யப்பட்டுள்ளன என மாவட்டச் செயலகம் வழங்கிய பதிலில் அத்தாட்சிப்படுத்தியுள்ளது.

இந்த 568 உறுதிகளையும் மாவட்டத்தின் 14 நொத்தாரிஸ்களில் 11 பேர் எழுதியுள்ளனர்.

இவற்றிற்கு அமைய 11 நொத்தாரிஸ்கள் மொத்தமாக எழுதிய 568 உறுதிகளில் ஒரு நொத்தாரிஸ் மட்டும் 478 உறுதிகள் எழுதியுள்ளார் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இதேநேரம் எஞ்சிய 10 நொத்தாரிஸ்களும் கடந்த 10 ஆண்டுகளும் 90 உறுதிகள் மட்டுமே எழுதியுள்ளனர். அந்த 90 உறுதிகளில் உச்சப் பட்சமாக ஒரு நொத்தாரிஸ் 20 உறுதிகளை எழுதியுள்ளார் எனவும் மாவட்டச் செயலகத்தின் மேலதிக அரச அதிபரும் தகவல் உத்தியோகத்தருமான சி.குணபாலன் வழங்கிய எழுத்து மூல பதிலில் கண்டறியப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்தத் தகவலைக்கோரி வடக்கின் ஐந்து மாவட்டச் செயலகங்களிடமும் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டபோது 4 மாவட்டங்கள் விவரத்தைச் சமர்ப்பித்தன. யாழ்ப்பாணம் மாவட்டம் மட்டும் பதிவாளர் நாயகத்தின் அனுமதியை பெற்று வழங்குவதாக முதலில் எழுத்தில் பதிலளித்தது. பதிலளிக்கவேண்டிய காலம் முடிவடைந்து திணைக்களத் தலைவரிடம் மேன் முறையீடு செய்தபோது இவ்வாறான தரவு தம்மிடம் இல்லை என முரணகையான பதில் வழங்கப்படுகின்றது.

# கிராம உத்தியோகத்தர்களின் போராட்டம் நிறைவடைந்தது

கிராம உத்தியோகத்தர்களினால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் மற்றும் கறுப்பு வாரம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளதாக கிராம உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதிகாரிகளுக்குத் தேவையான வகையில் தமது சேவை யாப்பைத் திருத்தி வர்த்தமானியில் வெளியிட்டதாகக் குறிப்பிட்டு அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 12 ஆம் திகதி முதல் இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடையும் வரை இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்தவுள்ளதாக இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமது பிரச்சினைகள் தொடர்பில் மீண்டும் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# இ.தொ.காவின் ஆதரவு ஜனாதிபதி ரணிலுக்கு!

## கட்சியின் தேசிய சபை ஏகமனதாக முடிவு

(ஆ.ரமேஸ்)

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு எனக் கட்சியின் தேசிய சபை ஏகமனதாக முடிவு செய்துள்ளது.**

**இவ்விடயம் தொடர்பில் தீர்மானத்தை எடுக்கும் காங்கிரஸின் உயரிய சபையான தேசிய சபை கூட்டம் கொட்டக்கலை காங்கிரஸ் தொழிலாளர் நிறுவன பொது மக்கள் கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழம மதியம் நடைபெற்றது.**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் காங்கிரஸின் பொது செயலாளர் ஆறுமுகம் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் தலைமையில் இந்த தேசிய சபை கூட்டம் இடம்பெற்றது.

இதன் போது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது எனத் தேசிய சபை உறுப்பினர்கள் ஏகமானதாக முடிவு செய்தனர்.

அதே நேரத்தில் தாம் ஆதரவளிக்கும் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்ரமசிங்கவுடன் மலையக மக்களின் எதிர் கால அபிவிருத்தி மற்றும் முன்னேற்ற செயற்பாடுகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை விரை வில் செய்து கொள்ள வேண்டும் என தேசிய சபை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தை கட்சியின் மேல்மட்டம் ஏற்று கொண்டது எனக் கட்சித் தலைவர் செந்தில் தொண்டமான் ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.











# எமது அரசாங்கத்தில் வற் வரி நீக்கப்படும்!

## அநுரகுமார திஸாநாயக்க கூறுகின்றார்

“எமது அரசாங்கத்தின் கீழ் அமையவுள்ள முதல் வரவு – செலவு திட்டத்தில் மருந்துகள், பாடசாலை பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களுக்கான வற் வரி நீக்கப்படும்.”

–இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் அங்குரார்ப்பண பேரணியில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அரசு உணவுக்கு வற் வரி அறவிடுகிறது. எமது அரசாங்கத்தில் முதல் பாதீட்டிலிருந்து உணவு மீதான வற் வரியை நீக்குவோம்.

சுகாதாரம் மற்றும் சுகாதார சேவைகள் மீதான வற் வரி நீக்கப்படும்.

பாடசாலை உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரியும் நீக்கப்படும். மக்களைக் காக்கவே அரசாங்கம்.

ஆனால் தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் தம்மைப் பாதுகாக்கவே பார்க்கின்றனர்.”– என்றார்.







# இன்றைய ராசி பலன்கள் - 19.08.2024




இன்றைய நாள் நீங்கள் விரும்பத்தக் கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத் தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீ லட்சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக்காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணிகளை குறித்த நேரத்துக்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக கையாள வேண்டும். அன்பும் புரிந்து கொள்ளுதலும் உறவைச் சிறப்பாக்கும்.




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படு வதை குறைத்துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக் காக நேரத்தையும் திறமையையும் பயன்படுத்துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்றுவீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடிவெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப் படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமையான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற்றி னால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதுக்கு ஆறுதல் தரும். முக்கிய முடிவு கள் எடுப்பதை தவிர்க்கவும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.




நீங்கள் அதிகப்படியாக செயலாற்றி னால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப்புள்ள பொருள்களை பாதுகாத் துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கை யாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவுகளை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செயலாற்றினால் நீங்கள் நன்மை காண லாம். பணியின் தரத்தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவை வளர்க்க உதவும்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறையாகத் திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி காண்பீர்கள். உங்கள் பணியைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள். பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்களின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள். இன்று ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறையான போக்கின் காரணமாக நீங்கள் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.08.2024




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்துக்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு செய்யலாம். தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கவும்.




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும். உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளைச் சிறந்ததாக ஆக்கலாம்.நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத்துக்குச் செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒருவரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.





